**சார்பு நீதிமன்றம், நாங்குநேரி**

**முன்னிலை:- திரு. எம். ராமதாஸ், எம்.எல்.,**

**சார்பு நீதிபதி, நாங்குநேரி**

2026 ம் ஆண்டு ஜனவரி மாதம் 02 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைநிலை மனு எண்.4/2025 இன்**

**அசல் வழக்கு எண்.35/2021**

சந்தனம் .... மனுதாரர்/வாதி

// எதிர் //

1) சங்கிலிமுத்து (இறப்பு)

2) மாசிலாமணி (இறப்பு)

3) ஜோசப் (இறப்பு)

4) அன்னமரியாள்

5) அ. கணேசன்

6) மா. கணேசன்

7) சங்கரன்

8) ராஜன் ..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

9) சேகர்

10) மாணிக்கம்

11) மணிமேகலா

12) இந்திரா ..... 9 முதல் 12 எதிர்மனுதாரர்கள்/9 முதல் 12 பிரதிவாதிகள்

13) முப்பிடாதி

14) அலெக்ஸ்சாண்டர்

15) பாண்டி ..... 13 முதல் 15 எதிர்மனுதாரர்கள்/உத்தேச 13 முதல் 15 பிரதிவாதிகள்

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.02 18:19:02 +0530

இந்த மனுவானது, என் முன்பு இறுதியாக 25.11.2025 அன்று விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. மு. அழகியநம்பி அவர்கள் முன்னிலையாகியும், 4 முதல் 11 மற்றும் 13, 14 ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. இ. இராவணசிவன் அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 2 எதிர்மனுதாரர்கள் இறந்துவிட்ட நிலையிலும், 12 ம் எதிர்மனுதாரர் ஒருதலைப்பட்சப்படுத்தப்பட்டும், இருதரப்பு வாதுரையை கேட்டும் இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்....

**உத்தரவு**

இம்மனுவானது, காலம் சென்ற 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் பிரதிவாதியின் வாரிசுகளான 13 முதல் 15 எதிர்மனுதாரர்களை, அசல் வழக்கில் 13 முதல் 15 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 22 விதி 4 மற்றும் பிரிவு 151 சி.பி.சி.-ன் படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனு சுருக்கம் :-**

மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், பிரதிவாதிகள் மீது பாகப்பிரிவினை பரிகாரம் கோரி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி அசல் வழக்கில் 2 ம் பிரதிவாதியான மாசிலாமணி கடந்த 03.12.2023 அன்று இறந்துவிட்டார் என்றும், வையாருக்கு 13 முதல் 15 எதிர்மனுதாரர்கள் வாரிசுகள் ஆவார்கள் என்றும், இம்மனு 13 முதல் 15 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 13 முதல் 15 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இம்மனு

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.02 18:19:07 +0530

அனுமதிக்கப்படாவிடில் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், எனவே, இம்மனு 13 முதல் 15 வரையிலான எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 13 முதல் 15 பிரதிவாதிகளாக கட்சி சேர்த்து உத்தரவிட வேண்டியது நீதியின் பொருட்டும் நியாயமாகவும், அவசியமாகவும் உள்ளது என்றும் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3) <u>15ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு, 4 முதல் 11 மற்றும் 13, 14ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம் :-</u>**

மனு சட்டப்படிக்கும் நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், வழக்கில் கண்ட 2ம் பிரதிவாதி, 13 முதல் 15 பிரதிவாதிகளாக சேர்க்க கோரும் தரப்பினை வாரிசுகளாக விட்டு விட்டு 03.12.2023ல் காலம் சென்றுவிட்டது வாஸ்த்தவம் என்றும், 03.12.2023ல் காலம் சென்றுவிட்ட 2ம் பிரதிவாதிக்கு வாரிசுகளை சேர்க்க 03.12.2023க்குள் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எனவே 03.03.2023க்குள் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், 2ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு அற்றுபோய்விட்டது என்றும், அதுவகைக்கு கட்டளை 22 விதி 9ன் கீழான மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அதுபோல் அற்றுபோய்விட்ட வழக்கினை சரி செய்ய கேட்டு, 03.05.2023க்குள் கட்டளை 22 விதி 9ன் கீழான மனு தாக்கல் செய்யாத நிலையில், மேற்படி மனுவினை தாக்கல் செய்வதில் வெகுநாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், அதுவகைக்கு காலவரையறை சட்டம் பிரிவு 5ன் நியதிகள் நாடப்படவில்லை என்றும், எனவே, 03.12.2023ல் இறந்துபட்ட

RAMADHAS
Digitally signed by RAMADHAS Date: 2026.01.02 18:19:12 +0530

2ம் பிரதிவாதிக்கு வாரிசுகளை சேர்க்க உரிய கால கெடுவுக்குள் மனு தாக்கல் செய்யப்படாமைக்கு எவ்வித காரணமும் கூறப்படாத நிலையில் இம்மனு நிலைக்கத்தக்கதல்ல என்றும், எனவே மனுதாரரின் மனுவை இந்த எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும் எதிருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

4) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை :-</u>**

காலம் சென்ற 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் வாரிசுகளான 13 முதல் 15 எதிர்மனுதாரர்களை, அசல் வழக்கில் 13 முதல் 15 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டி தாக்கல் செய்யப்பட்ட இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5) இருதரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர் தரப்பில், அசல் வழக்கில் 2ம் பிரதிவாதியான மாசிலாமணி கடந்த 03.12.2023 அன்று இறந்துவிட்டார் என்றும், ஷையாருக்கு 13 முதல் 15 எதிர்மனுதாரர்கள் வாரிசுகள் ஆவார்கள் என்றும், இம்மனு 13 முதல் 15 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் 13 முதல் 15 பிரதிவாதிகளாக கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இம்மனு அனுமதிக்கப்படாவிடில் மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும் என்றும், எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் வாதிடப்பட்டது.

RAMADHAS
Digitally signed by RAMADHAS
Date: 2026.01.02 18:19:18 +0530

**6)** எதிர்மனுதாரர்கள் தரப்பில், 03.12.2023 ல் காலம் சென்றுவிட்ட 2 ம் பிரதிவாதிக்கு வாரிசுகளை சேர்க்க 03.12.2023 க்குள் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எனவே 03.03.2023 க்குள் நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், 2 ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு அற்றுபோய்விட்டது என்றும், அதுவகைக்கு கட்டளை 22 விதி 9 ன் கீழான மனு தாக்கல் செய்யப்படவில்லை என்றும், அதுபோல் அற்றுபோய்விட்ட வழக்கினை சரி செய்ய கேட்டு, 03.05.2023 க்குள் கட்டளை 22 விதி 9 ன் கீழான மனு தாக்கல் செய்யாத நிலையில், மேற்படி மனுவினை தாக்கல் செய்வதில் வெகுநாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்றும், அதுவகைக்கு காலவரையறை சட்டம் பிரிவு 5 ன் நியதிகள் நாடப்படவில்லை என்றும், எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று வாதிடப்பட்டது.

**7)** அசல் வழக்கின் 2 ம் பிரதிவாதியான மாசிலாமணி என்பவர் 03.12.2023 ல் காலம் சென்றுவிட்டார் என்பதையும், இம்மனுவின் 13 முதல் 15 எதிர்மனுதாரர்கள் அவருடைய வாரிசுகள் என்பதையும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் மறுக்கப்படாத சங்கதிகளாக உள்ளது. மேலும், வாரிசுகளை சேர்க்க தாக்கல் செய்யப்பட்ட இம்மனு இந்நீதிமன்றத்தில் 01.03.2024 ல் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் மனுவில் சொல்லியுள்ள காரணங்களை கருத்தில் கொண்டும், மனுதாரர் அவரது தரப்பு வழக்கை நிரூபிக்க ஒரு சந்தர்ப்பம் அளிக்கும் வகையிலும், மேற்கண்ட ஏனைய காரணங்களாலும் இம்மனுவை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருகிறது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.02 18:19:24 +0530

**8)** முடிவாக, காலம் சென்ற 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதியின் வாரிசுகளான 13 முதல் 15 எதிர்மனுதாரர்களை, அசல் வழக்கில் 13 முதல் 15 பிரதிவாதிகளாக சேர்க்கலாம் என இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 02ம் நாளாகிய இன்று இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.02 18:19:29 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

**மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

RAMADHAS Digitally signed by RAMADHAS Date: 2026.01.02 18:19:34 +0530

சார்பு நீதிபதி,

நாங்குநேரி

சார்பு நீதிமன்றம்,

நான்குநேரி

இ.ம.எண்.4/2025 இன்

அ.வ.எண்.35/2021

நேரிய / வரைவு உத்தரவு

நாள் - 02.01.2026